# தலைவரின் மடல்




"இதன் வழி கின்னஸ் எங்கர் பெர்ஹாட்டின், கடந்த நிதி ஆண்டின் வரிக்கு முந்திய லாபம் RM142.21 மில்லியன் ஆகும். இது முந்தைய ஆண்டின் RM140.52 யைக் காட்டிலும் 1.2 விழுக்காடு அதிகமாகும். அதாவது முந்தைய ஆண்டின் வருமானமான RM952.11 மில்லியனிலிருந்து கடந்த ஆண்டு RM976.01 மில்லியன் என்று 2.5 விழுக்காடு உயர்ந்ததால் இந்நிலை உருவானது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவத்துக்கொள்கிறேன்."

டான்ஸ்ரீ சாவ் ஹுவாட் லை






# தலைவரின் மடல்

## GAB விடாமுயற்சியின் சின்னம், சிரமமான காலத்திற்கு ஏற்ற மதுபானம்.

பல சவால்கள் நிறைந்த கடந்த நிதியாண்டை நான் திரும்பி பார்க்கிறேன். சிரமமான காலம் தொடர்ந்தது. எப்பொழுதும் இல்லாத அளவு கடந்த 2005 ஆம் ஆண்டு படஜெட்டில் உள்நாட்டு வரி 26.7 விழுக்காடாக உயர்ந்தது. அதன் விளைவால் புதிய நிதியாண்டில் வர்த்தக சந்தை மிகவும் சிரமமான சூழலுக்கு தள்ளப்பட்டது. அதனை அடுத்து 2006 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் மீண்டும் மூன்றாவது முறையாக உள்நாட்டு வரி ஏற்றம் கண்டதன் வழி சந்தை மீளுவதற்கு உரிய அனைத்து சாதகமான வழிகளும் முடங்கின.

உள்நாட்டு வரி 9 விழுக்காடாக உயர்ந்த அதே வேளையில் பெட்ரோல் மற்றும் மின்சாரக் கட்டணம் ஆகியவையும் ஏற்றம் கண்டன. இவை யாவும் GABக்கு மிகவும் சவாலான சந்தை சூழ்நிலையை ஏற்படுத்தின.

அதிஸ்ட வசமாக, எத்தகைய கடுமையான சூழலலையும் எதிர்கொள்ளும் GABயின் தனித்தன்மையினால், கடந்த ஜுன் 30ஆம் நாள் 2006ல் முடிவுற்ற நிதியாண்டில் மீண்டும் வளமான வகையில் GAB தனது நிதி நடவடிக்கைகளை முடித்துள்ளது.

இதன் வழி கின்னஸ் எங்கர் பெர்ஹாட்டின், கடந்த நிதி ஆண்டின் வரிக்கு முந்திய லாபம் RM142.21 மில்லியன் ஆகும். இது முந்தைய ஆண்டின் RM140.52 யைக் காட்டிலும் 1.2 விழுக்காடு அதிகமாகும். அதாவது முந்தைய ஆண்டின் வருமானமான RM952.11 மில்லியனிலிருந்து கடந்த ஆண்டு RM976.01 மில்லியன் என்று 2.5 விழுக்காடு உயர்ந்ததால் இந்நிலை உருவானது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவத்துக்கொள்கிறேன்.

மிகவும் சோர்வான சூழலில் இந்த உயர்வானது நமக்கு மிகுந்த ஆருதலை அளிக்கிறது.







1. *Celebrate. Celebrities and Tiger FC*
   நெருக்கமாக இருங்கள் டைகர் நேரத்தில் நண்பர்களுடன்
2. *Up close. A Tiger moment with friends*
   கண்டுபிடியுங்கள் ஹெனெய்க்கின்னின் புதிய பொருள் பிரச்சார இசை பயனத்தை
3. *Discover. A journey in music with Heineken's new thematic campaign*
   கொண்டாடுங்கள் டைகர் எ.ஃப்.சி. மற்றும் புகழ்பெற்றவர்களுடன்

# தலைவரின் மடல்

## அனைத்து இடர்களை எதிர்த்து.

கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து உயர்த்தப்பட்ட உள்நாட்டு வரியினால் மதுபான சந்தை (MLM) கனிசமான அளவு சுமையை எதிர்நோக்கியது. இக்காலக் கட்டத்தில் வரிச்சுமையின் தாக்கத்தை மதுபான சந்தை முழுமையாக உணர முடிந்தது எனலாம் ஏனெனில் இச்சந்தை ஏறத்தாழ 8 விழுக்காடு சரிவு கண்டது.

மதுபான சந்தையின் கடுமையான சரிவுக்கு அதன் விலையேற்றம் காரணமாக மது பயனீடு குறைந்தது என்பது ஒரு புறம் இருக்க அதிகரித்துள்ள கடத்தல் நடவடிக்கைகளும் ஒரு காரணம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதிகரிக்கப்பட்ட உள்நாட்டு வரியானது கடத்தல்காரர்களுக்கு அதிகளவு லாபத்தை தருவதால், அரசாங்கத்தின் கடுமையான கடத்தல் முறியடிப்பு நடவடிக்கைகளை மீறியும் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட அவர்கள் துணிந்துள்ளனர். இது போன்ற இடர்களினால் சோர்வுறாதிருக்க GAB இத்தருனத்தில் தனது சுய ஆற்றலை முழுமையாக செயல்படுத்தியது. ஆக்கப்பூர்வ ஒருங்கிணைப்பு, செயல்திறன்மிக்க நடவடிக்கை முறை மற்றும் பல வகைப்படுத்தப்பட்ட வர்த்தக சின்னம் ஆகியவையே GAB யின் வெற்றிகரமான திட்ட வழிமுறையாக திகழ்கின்றன.

நவீன மதுபான தயாரிப்பு முறை, பொருள் மற்றும் செயல்முறையில் புதுமை, செலவினங்களை குறைக்கும் வழிவகை & உறுதியான சந்தை முறை ஆகியவற்றில் தூர நோக்குடன் உரிய நேரத்தில் முதலீடு செய்த வாரியத்திற்கே இந்த வெற்றியின் புகழ் சேரும்.

நமது வாடிக்கையாளர்கள்: நமது உயிர்நாடி , நமது மக்கள் நமது பங்காளிகள் : நமது நாடி துடிப்பு, நமது சின்னங்கள் : நமது கௌரவம் ஆகிய கொள்கைளோடு பாரம்பரியமிக்க வர்த்துகச் சின்னம் மற்றும்

# தலைவரின் மடல்

வெற்றி பெறும் மனத்திடம் ஆகியன கால மாற்றத்தில் ஏற்படும் தேவைகளை சந்திக்கவும் பங்கெடுக்கவும் GAB என்ற நிறுவனத்திற்கு ஒரு தொழில்மய கலாச்சாரத்ததை உருவாக்கியுள்ளன.

இந்த ஆற்றலினால் உற்சாகம் அடைந்துள்ள வாரியம், சாதகமான சந்தை சூழலில் இன்னும் சிறப்பாக செயல்பட தயாராய் உள்ளது. வரும் 2007ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் மற்றொரு சுற்று உள்நாட்டு வரியை உயர்த்துவது சரியானதல்ல என்ற அரசாங்கத்தின் கருத்தானது நமக்கு ஆருதல் அளிக்கிறது.

கடந்த நிதியாண்டின் சிறப்பான செயல்பாட்டினைத் தொடர்ந்து, இயக்குநர் வாரியமானது ஒரு 50 காசு பொருளுக்கு மலேசிய வருமான வரி 28 விழுக்காடு போக 29 காசை லாப ஈவாக வழங்க பரிந்துரைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் வழி இந்த நிதி ஆண்டு ஒரு 50 காசு பொருளுக்கு 42 காசு லாப ஈவு வழங்கப்படவுள்ளது. முந்தைய நிதி ஆண்டில் ஒரு 50 காசு பொருளுக்கு 41 காசு லாப ஈவாக வழங்கப்பட்டது.

இவ்வேளையில் GABயின் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் நமது பங்குதாரர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் இயக்குர் வாரியத்தின் சார்பில் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். அதே நேரத்தில் தொடர்ந்து வற்றாத ஒத்துழைப்பு நல்கி வரும் விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் அர்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்கெல்லாம் மேலாக நமது சின்னங்களுக்கு என்றென்றும் விசுவாசமாக இருந்து வரும் வாடிக்கையாளர்களுக்கு நமது நன்றி உரித்தாகட்டும்.

நன்றி.



டான்ஸ்ரீ சாவ் ஹுவாட் லை
தலைவர்
**18 செப்டம்பர் 2006**